T03553
R001I01
3553

3553

# Sirupanatruppadai Vilakkam

(Text, Commentary and English Translation)

V. KANDASWAMI MUDALIYAR, B.A., L.T.,

★

OTTRUMAI OFFICE
Theagarayanagar :: Madras.

[*Price* **10** *As.*

3553

# ¶ பாணாற்றுப்படை விளக்கம்

★

A. கந்தசுவாமி முதலியார், பி. ஏ., எல். டி.,
எழுதியது.

★

ஒற்றுமை ஆபீஸ்,
தியாகராய நகர், மதராஸ்.

1947

[விலை அணா 10

# சிறுபாணாற்றுப்படை

மணிமலைப் பணைத்தோண் மாநில மடந்தை
அணிமுலைத் துயல்வரூஉ மாரம் போலச்
செல்புன லுழந்த சேய்வரற் கான்யாற்றுக்
கொல்கரை நறும்பொழிற் குயில்குடைந் துதிர்த்த
புதுப்பூஞ் செம்மல் சூடிப் புடைநெறித்துக்
கதுப்புவிரித்தன்ன காழக நுணங்கறல்
அயிலுருப் பனைய வாகியைது நடந்து
வெயிலுருப் புற்ற வெம்பரல் கிழிப்ப
வேனி னின்ற வெம்பத வழிநாள்
காலை ஞாயிற்றுக் கதிர்கடா வுறுப்பப்
பாலைநின்ற பாலை நெடுவழிச்
சுரன்முதன்மரா அத்த வரி நிழலசைஇ
ஐதுவீ ழிகுபெய லழகு கொண்டருளி
நெய்கனிந் திருளிய கதுப்பிற் கதுப்பென
மணிவயிற் கலாபம் பரப்பிப் பலவுடன்
மயின்மயிற் குளிக்குஞ் சாயற் சாஅய்
உயங்குநாய் நாவி னல்லெழி லசைஇ
வயங்கிழை யுலறிய வடியினடி தொடர்ந்
தீர்ந்துநிலந் தோயு மிரும்பிடித் தடக்கையிற்
சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென
மால்வரை யொழுகிய வாழை வாழைப்
பூவெனப் பொலிந்த வோதி யோதி
நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சிக்
களிச்சுரும் பரற்றுஞ் சுணங்கிற் சுணங்குபிதிர்ந்
தியாணர்க் கோங்கி னவிர்முகை யெள்ளிப்
பூணகத் தொடுங்கிய வெம்முலை முலையென
வண்கோட் பெண்ணை வளர்த்த நுங்கின்
இன்சே றிகுதரு மெயிற்றி னெயிறெனக்
குல்லையம் புறவிற் குவிமுகை யவிழ்ந்த
முல்லை சான்ற கற்பின் மெல்லியல்
மடமா னோக்கின் வாணுதல் விறலியர்

நடைமெலிந் தசைஇய நன்மென் சீறடி
கல்லா விளையர் மெல்லத் தைவரப்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
இன்குரற் சீறியா ழிடவயிற் றழீஇ
நைவளம் பழுநிய நயந்தெரி பாலை
கைவல் பாண்மகன் கடனறிந் தியக்க
இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇத்
துனிகூ ரெவ்வமொடு துயராற்றுப் படுப்ப
முனிவிகந் திருந்த முதுவா யிரவல
கொழுமீன் குறைய வொதுங்கி வள்ளிதழ்க்
கழுநீர் மேய்ந்த கயவா யெருமை
பைங்கறி நிவந்த பலவி னீழல்
மஞ்சண் மெல்லிலை மயிர்ப் புறந்தைவர
விளையா விளங்க ணாற மெல்குபு பெயராக்
குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளும்
குடபுலங் காவலர் மருமா னொன்னார்
வடபுல விமயத்து வாங்குவிற் பொறித்த
எழுவுறழ் திணிதோ ளியறேர்க் குட்டுவன்
வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே யதாஅன்று
நறவுவா யுறைக்கு நாகுமுதிர் நுணவத்
தறைவாய்க் குறுந்துணி யயிலுளி பொருத
கைபுனை செப்பங் கடைந்த மார்பிற்
செய்பூங் கண்ணி செவிமுத றிருத்தி
நோன்பகட் டுமண ரொழுகை யொடுவந்த
மகாஅ ரன்ன மந்தி மடவோர்
நகாஅ ரன்ன நளிநீர் முத்தம்
வாள்வா யெருந்தின் வயிற்றகத் தடக்கித்
தோள்புற மறைக்கு நல்கூர் நுசுப்பின்
உளரிய லைம்பா லுமட்டிய ரீன்ற
கிளர்பூட் புதல்வரொடு கிலுகிலி யாடும்
தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்
தென்புலங் காவலர் மருமா னொன்னார்
மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக்
கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்
தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்

மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே யதாஅன்று
நறுநீர்ப் பொய்கை யடைகரை நிவந்த
துறுநீர்க் கடம்பின் றுணையார் கோதை
ஓவத் தன்ன வுண்டுறை மருங்கிற்
கோவத் தன்ன கொங்குசேர் புறைத்தலின்
வருமுலை யன்ன வண்முகை யுடைந்து
திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை
ஆசி லங்கை யரக்குத் தோய்ந்தன்ன
சேயிதழ் பொதிந்த செம்பொற் கொட்டை
ஏம வின்றுணை தழீ இயிற குளர்ந்து
காமரு தும்பி காமரஞ் செப்பும்
தண்பணை தழீ இய தளரா விருக்கைக்
குணபுலங் காவலர் மருமா னொன்னார்
ஓங்கெயிற் கதவ முருமுச்சுவல் சொறியும்
தூங்கெயி லெறிந்த தொடிவிளங்கு தடக்கை
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்
ஓடாப் பூட்கை யுறந்தையும் வறிதே யதாஅன்று
வானம் வாய்த்த வளமலைக் கவாஅற்
கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய
அருந்திற லணங்கி னாவியர் பெருமகன்
பெருங்க னாடன் பேகனுஞ் சுரும்புண
நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற்
பறம்பிற் கோமான் பாரியுங் கறங்குமணி
வா லுளைப் புரவியொடு வையக மருள
ஈர நன்மொழி யிரவலர்க் கீந்த
அழறிகழ்ந் திமைக்கு மஞ்சுவரு நெடுவேற்
கழறொடித் தடக்கைக் காரியு நிழறிகழ்
நீல நாக நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்து புலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி யாயு மால்வரைக்
கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி
அமிழ்துவிளை தீங்கனி யௌவைக் கீந்த

உரவுச்சினங் கனலு மொளிதிகழ் நெடுவேல்
அரவக்கடற் றானை யதிகனுங் கரவாது
நட்டோ ருவப்ப நடைப்பரி காரம்
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாட னள்ளியு நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை யோரியு மெனவாங்
கெழுசமங் கடந்த வெழுவுறழ் திணிதோள்
எழுவர் பூண்ட வீகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் றாங்கிய வுரனுடை நோன்றாள்
நறுவீ நாகமு மகிலு மாரமும்
துறையாடு மகளிர்க்குத் தோட்புணையாகிய
பொருபுன றரூஉம் போக்கரு மரபின்
தொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா விலங்கை மன்ன ருள்ளும்
மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வாள்
உறுபுலித் துப்பி னோவியர் பெருமகன்
களிற்றுத்தழும் பிருந்த கழறயங்கு திருந்தடிப்
பிடிக்கணஞ் சிதறும் பெயன்மழைத் தடக்கைப்
பல்லியக் கோடியர் புரவலன் பேரிசை
நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு
தாங்கரு மரபிற் றன்னுந் தந்தை
வான்பொரு நெடுவரை வளனும் பாடி
முன்னாட் சென்றன மாக விந்நாள்
திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பான்முலை கவர்த னோனாது
புனிற்றுநாய் குரைக்கும்புல்லெ னட்டில்
காழ்சோர் முதுசுவர்க் கணச்சித லரித்த
பூழி பூத்த புழற்கா ளாம்பி
ஒல்குபசி யுழந்த வொடுங்குநுண் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த

குப்பை வேளை யுப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்
திரும்பே ரொக்கலொ டொருங்குடன் மிசையும்
அழிபசி வருத்தம் வீடப் பொழிகவுட்
டறுகட் பூட்கைத் தயங்குமணி மருங்கிற்
சிறுகண் யானையொடு பெருந்தே ரெய்தி
யாமவ ணின்றும் வருது நீயிரும்
இவணயந் திருந்த விரும்பே ரொக்கற்
செம்ம லுள்ளமொடு செல்குவி ராயின்
அலைநீர்த் தாழை யன்னம் பூப்பவும்
தலைநாட் செருந்தி தமனிய மருட்டவும்
கடுஞ்சூன் முண்டகங் கதிர்மணி கழாஅலவும்
நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்பவும்
கானல் வெண்மணல் கடலுலாய் நிமிர்தரப்
பாடல் சான்ற நெய்த னெடுவழி
மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவிற் பட்டினம் படரின்
ஓங்குநிலை யொட்டகந் துயின்மடிந் தன்ன
வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறகிற்
கரும்புகைச் செந்தீ மாட்டிப் பெருந்தோள்
மதியேக் கறாஅ மாசறு திருமுகத்து
நுதிவே னோக்கி னுளைமக ளரித்த
பழம்படு தேறல் பரதவர் மடுப்பக்
கிளைமலர்ப் படப்பைக் கிடங்கிற் கோமான்
தளையவிழ் தெரியற் றகையோற் பாடி
அறற்குழற் பாணி தூங்கி யவரொடு
வறற்குழற் சூட்டின் வயின்வயிற் பெறுகுவிர்
பைந்நனை யவரை பவழங் கோப்பவும்
கருநனைக் காயாக் கணமயி லவிழவும்
கொழுங்கொடி முசுண்டை கொட்டங் கொள்ளவும்
செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும்
கொல்லை நெடுவழிக் கோப மூரவும்
முல்லை சான்ற முல்லையம் புறவின்
விடர்கா லருவி வியன்மலை மூழ்கிச்
சுடர்கான் மாறிய செவ்வி நோக்கித்

திறல்வே னுதியிற் பூத்த கேணி
விறல்வேல் வென்றி வேலூரெய்தின்
உறுவெயிற் குலைஇய வுருப்பவிர் குரம்பை
எயிற்றிய ரட்ட வின்புளி வெஞ்சோறு
தேமா மேனிச் சில்வளை யாயமொ
டாமான் சூட்டி னமைவரப் பெறுகுவிர்
நறும்பூங் கோதை தொடுத்த நாட்சினைக்
குறுங்காற் காஞ்சிக் கோம்பரேறி
நிலையருங் குட்ட நோக்கி நெடிதிருந்து
புலவுக்கய லெடுத்த பொன்வாய் மணிச்சிரல்
வள்ளுகிர் கிழித்த வடுவாழ் பாசடை
முள்ளரைத் தாமரை முகிழ்விரி நாட்போது
கொங்குகவர் நீலச் செங்கட் சேவல்
மதிசே ரரவின் மானத்தோன்றும்
மருதஞ் சான்ற மருதத் தண்பணை
அந்தண ரருகா வருங்கடி வியனகர்
அந்தண் கிடங்கினவ் ஆமூ ரெய்தின்
வலம்பட நடக்கும் வலிபுண ரெருத்தின்
உரன்கெழு நோன்பகட் டுழவர் தங்கை
பிடிக்கை யன்ன பின்னுவீழ் சிறுபுறத்துத்
தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப
இருங்கா ழுலக்கை யிரும்புமுகந் தேய்த்த
அவைப்புமா ணரிசி யமலைவெண் சோறு
கவைத்தா ளலவன் கலவையொடு பெறுகுவிர்
எரி மறிந் தன்ன நாவி னிலங்கெயிற்றுக்
கருமறிக் காதிற் கவையடிப் பேய்மகள்
நிணனுண்டு சிரித்த தோற்றம் போலப்
பிணனுகைத்துச் சிவந்த பேருகிர்ப் பணைத்தாள்
அண்ணல் யானை யருவிதுக ளவிப்ப
நீறடங்கு தெருவினவன் சாறயர் மூதூர்
சேய்த்து மன்று சிறிது நணி யதுவே
பொருநர்க் காயினும் புலவர்க் காயினும்
அருமறை நாவி னந்தணர்க் காயினும்
கடவுண் மால்வரை கண்விடுத் தன்ன
அடையா வாயிலவ னருங் கடை குறுகிச்

செய்ந்நன் றறிதலுஞ் சிற்றின மின்மையும்
இன்முக முடைமையு மினிய னாதலும்
செறிந்துவிளங்கு சிறப்பி னறிந்தோ ரேத்த
அஞ்சினர்க் களித்தலும் வெஞ்சின மின்மையும்
ஆணணி புகுதலு மழிபடை தாங்கலும்
வாண்மீக் கூற்றத்து வயவ ரேத்தக்
கருதியது முடித்தலுங் காமுறப் படுதலும்
ஒருவழிப் படாமையு மோடிய துணர்தலும்
அரியே ருண்கண் ணரிவைய ரேத்த
அறிவு மடம் படுதலு மறிவுநன் குடைமையும்
வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசில ரேத்தப்
பன்மீ னடுவட் பான்மதி போல
இன்னகை யாயமொ டிருந்தோற் குறுகிப்
பைங்க ணூகம் பாம்பு பிடித்தன்ன
அங்கோட்டுச் செறிந்த வவிழ்ந்துவீங்கு திவவின்
மணிநிரைத் தன்ன வனப்பின் வாயமைத்து
வயிறுசேர் பொழுகிய வகையமை யகளத்துக்
கானக் குமிழின் கனிநிறங் கடுப்பப்
புகழ்வினைப் பொலிந்த பச்சையொடு தேம்பெய்
தமிழ்துபொதிந் திலிற்று மடங்குபுரி நரம்பிற்
பாடுதுறை முற்றிய பயன்றெரி கேள்விக்
கூடுகொ ளின்னியங் குரல்குரலாக
நூனெறி மரபிற் பண்ணி யானாது
முதுவோர்க்கு முகிழ்த்த கையினை யெனவும்
இளையோர்க்கு மலர்ந்த மார்பினை யெனவும்
ஏரோர்க்கு நிழன்ற கோலினை யெனவும்
தேரோர்க் கழன்ற வேலினை யெனவும்
நீசில மொழியா வளவை மாசில்
காம்புசொலித் தன்ன வறுவை யுடீஇப்
பாம்புவெகுண் டன்ன தேற னல்கிக்
காவெரி யூட்டிய கவர்கணைத் தூணிப்
பூவிரி கச்சைப் புகழோன் றன்முன்
பனிவரை மார்பன் பயந்த நுண்பொருட்
பனுவலின் வழாஅப் பல்வேறடிசில்

வாணிற விசும்பிற் கோண்மீன் சூழ்ந்த
இளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து
விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி
ஆனா விருப்பிற் றானின் றூட்டித்
திறல்சால் வென்றியொடு தெவ்வுப்புல மகற்றி
விறல்வேன் மன்னர் மன்னெயின் முருக்கி
நயவர் பாணர் புன்கண் டீர்த்தபின்
வயவர் தந்த வான்கேழ் நிதியமொடு
பருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி
உருவ வான்மதி யூர்கொண் டாங்குக்
கூருளி பொருத வடுவாழ் நோன்குறட்
டாரஞ் சூழ்ந்த வயில்வாய் நேமியொடு
சிதர்நனை முருக்கின் சேணோங்கு நெடுஞ்சினைத்
ததர்பிணி யவிழ்ந்த தோற்றம் போல
உள்ளரக் கெறிந்த வுருக்குறு போர்வைக்
கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி
ஊர்ந்துபெயர் பெற்ற வெழினடைப் பாகரொடு
மாசெல வொழிக்கு மதனுடை நோன்றாள்
வாண்முகப் பாண்டில் வலவனொடு தரீஇ
அன்றே விடுக்குமவன் பரிசின் மென்றோட்
டுகிலணி யல்குற் றுளங்கியன் மகளிர்
அகிலுண விரித்த வம்மென் கூந்தலின்
மணிமயிற் கலாப மஞ்சிடைப் பரப்பித்
துணிமழை தவழுந் துயல்கழை நெடுங்கோட்
டெறிந்துரு மிறந்த வேற்றருஞ் சென்னிக்
குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணிச்
செல்லிசை நிலைஇய பண்பின்
நல்லியக் கோடனை நயந்தனிர் செலினே

ஒய்மானாட்டு நல்லியக்கோடனை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடிய சிறுபாணாற்றுப்படை முற்றிற்று.

# சிறு பாணற்றுப் படையின் உரை

---

(இளவேனில் கடந்த முதுவேனிற் காலத்தில், கூத்தர்கள் மலையாற்றைக் கடந்து பாலை வழியாகச் செல்லுகின்றனர்.)

மலையருவியின் தோற்றம் : 1-2. *மணிமலை பணைதோள் மா நில மடந்தை அணி முலை ஆரம்போல=பல மணிநிறங் கொண்ட மலைபோன்றதும் மூங்கில்போல் (திரட்சியும் வழு வழுப்புமான) தோள்களையுடைய சிறப்புவாய்ந்த மண்மக ளின் அழகிய முலையின் கண் (தொங்காநிற்கும்) முத்துத் தாவடம் போன்ற; 3-4. செல்புனல் உழந்த, சேய் வரல் கான்யாற்று, கொல் கரை நறு பொழில்=ஓடுகின்ற நீரோட்ட த்தால் மோதல் பெற்று, தூரத்தினின்று இழிந்துவரும் காட்டாற்றின், இடிந்து வீழ்ந்த இருகரைகளிலுள்ள நறு மணங்கொண்ட (பூக்களையுடைய) பூஞ்சோலைப் பக்கத்தில்;*

ஆற்றறலின் வழி :— 4-8. *குயில் குடைந்து உதிர்த்த புதுப் பூ செம்மல் சூடி, புடை நெறித்து=குயில்கள் (தங்கள் அலகுகளால்) துளைத்துச் சிந்தின காலை பூத்த பூக்களின் வாடிப்போனபூக்களை(முடித்து)அலங்கரித்தால் போல,இடம் அறல்பட்டுக் கிடக்கும் தோற்றம்; கதுப்பு விரித்தன்ன= மகளிரின் மயிர் விரித்தால் போலுள்ள; கார் அகம் நுணங்கு அறல் அயில் உருப்பு அனையவாகி=கருமையைத் தன்னிடத் தேயுள்ள நுண்மையையுடைய ஆற்று அறலின் (சிறு கற்கள்) வேல் காய்ந்தால்போல சுட; ஐது நடந்து=மெத்தன நடந்து;*

பாலைவழியின் வருத்தம் :— 8. வெயில் உருப்புற்ற வெம்பரல் கிழிப்ப = வெயிலால் வெம்மையுற்ற வெவ்விய பருக்கைக் கற்கள் (கால்களின் அடிகளைக்) கிழித்ததனால்;

9–12. வேனில் நின்ற வெம்பத வழிநாள், காலை ஞாயிறு கதிர்கடாவுறுப்ப = இளவேனில்காலம் பிற்பட்ட முதுவேனில் காலத்தால் வெம்மையுற்றுப் பின் தோன்றிய (முதுவேனில்) காலத்தின், காலை சூரியனின் கதிர்கள் வெம்மைகொண்டு சுட ; பாலை நின்ற பாலை நெடுவழி, சுரன் முதல் மராத்த வரி நிழல் அசைஇ = நீரும் நிழலும் அற்று பாலைகாலப் பாலை நிலத்தின் தொலையாத வழியின், (பாலை நிலத்திற்குரிய) கடபத்தின் அடிமரத்தின் வரி வரியாயிருக்கும் (செறியாத) நிழலில் (வெம்மை நீங்க) தங்கி,

பாடுமகளின் தோற்றம் : 13–14. ஐது வீழ் இரு பெயல், அழகு கொண்டு அருளி நெப் கனிந்து இருளிய கதுப்பின் = மெல்லிதாய் தாழ்ந்து விழும்மேகச்சாரல், அழகுற்று வீழ்வதுபோல எண்ணெய் மிகுதியாய்ப்பூசி இருண்ட மயிரினையும் ;

14-16. கதுப்பு என மணிவயின் கலாபம் பரப்பி = (மகளிரின் விரிந்த) கூந்தல் போல நீலமணி நிறங்கொண்ட, (கண்களையுடைய) தோகையை விரித்து ; பலவுடன் மயில்மயில் குளிக்கும் சாயல் = பலமயில்களும் ஒரு மயிலினிடையே இன்னொரு மயில், (பாணினியின் அழகிய சாயலைக் கண்டு வெட்கமுற்று) மறையும் அத்தகைய சாயலினையும், (சாயல் மென்மை, சாயலின் பண்பு மென்மை என்கிறார் தொல்காப்பியனார்)

16–18. சாய் உயங்கு நாய் நாவின் நல் எழில் அசைஇ, வயங்கு இழை உலறிய அடி = (ஓடி) இளைத்து வருந்துகின்ற,

நாயின் நாக்குப்போன்ற நல்ல அழகொடு நடக்கும், விளங்கு கின்ற காலணி இல்லாத அடியினையும்,

**18-20.** அடி தொடர்ந்து, ஈர்ந்து, நிலம் தோயும், இரு பிடி தடக்கையின், சேர்ந்து உடன் செறிந்த குறங்கின் = அடி யோடே தொடர்புற்று, இழுக்கப்பட்டு நிலத்தே பொருந்திய, பெரிய பெண் யானையினது சிறந்த துதிக்கைபோல, இரண் டும் ஒன்றாய்ச் சேர்ந்து பருத்த தொடைகளையும்,

**20-22.** குறங்கின் மால்வரை ஒழுகிய வாழை, வாழை பூ அன்ன ஓதி = மகளிரின் குறங்கையொத்து பெரிய மலை யின்கண் ஒழுங்குபட வளர்ந்த வாழை மரத்தின், வாழைப் பூ என (அழகு பெறச்சிவிமுடித்த) முடியையும்,

(ஓதி: ஐம்பாலாய் முடிக்கும் முடியில் ஒன்று, அதைப் பனிச்சை என்பர், அது இக்காலத்துக் 'கோடாலி' முடி போலும்)

**21-26.** ஒதி = இசைபாடி, நளிசினை வேங்கை, நாள் மலர், நச்சி, களிற்சுரும்பு அரற்றும், சுணங்கின் சுணங்குபிதிர்ந்து = செறிந்த கிளைகளையுடைய வேங்கை மரத்தின், அந்நாள் பூத்த மலரை விரும்பி,(தேனையுண்டு) களித்த ஆண் வண்டுகள் ஆர வாரிக்கும் (தோற்றம்போல) தேமலொடு தேமல் கலந்தும்; யாணர் கோங்கின் அவிர் முகை எள்ளி, பூண் அகத்து ஒடுங் கிய, வெம்முலை = புதிதாகப் பூத்த கோங்க மரத்தின் விளங் கும் முகையினும் அழகு பெற்றதும், ஆபரணம் அவ்விடம் கிடந்து விருப்பத்தை யுண்டு பண்ணுவதுமான முலையினை யும், (சுணங்கினுக்கு வேங்கைப் பூவைச்சுற்றி ரீங்காரம் செய் யும் வண்டின் கூட்டத்தையும், முலைக்குக் கோங்க மரத்தின் முகையையும் உவமிக்கிறார்.)

26–28. முலையென = முலைபோலும்; வள்கோள் பெண்ணையின் = பெரிய குலையினையுடைய பனைமரத்தின்; வளர்ந்த நுங்கின் — முற்றின நுங்கின்; செறிநீர் தரும் எயிற்றின் = இனிமைகொண்டு செறிந்த நீர் போல் (இன்பம்) தரும், பற்களினையும். (குறள்: பால்போல் தேன்கலந்தற்றே பணிமொழி, வால் எயி றூறியநீர்.) (முலைக்கு நுங்கும், எயிற்றினில் தோன்றும் உமிழ் நீருக்கு நுங்கினின்று விழும் இனிய நீரும் உவமை; குறங்கினை பிடியின் மெலிந்து வீங்கும் துதிக்கைக்கு உவமைப் படுத்தியவர், அதன் அருவருப்பு நீங்க வாழைமரத்தின் அழகிய தோற்றத்துக்கு மேலும் உவமிக்கிறார்.)

28-30. எயிறெனை, குல்லை அம்புறவில், குவி முகை அவிழ்ந்த, முல்லை சான்ற கற்பின் = (முத்துப்) பற்களை யொத்த கஞ்சங் குல்லை (வளரும்) அழகிய காட்டிடத்தே, குவிந்த முகை மலர்ந்த; (மாசற்ற) முல்லை போன்ற கற்பினையும்,

(பற்களுக்குக் கஞ்சங் குல்லை மொட்டும், கற்பினுக்கு மாசற்ற முல்லைப் பூவும் உவமை; இக்காலத்தும் அக்காலத்தும் முல்லை சூடுதல் கற்புடை பெண்களுக்கு உரித்து)

30-31. மெல் இயல், மடம் மான் நோக்கின், வாள் நுதல் விறலியர் = மென்மையான இயல்பினையும், மடப்பத்தையுடைய பிணைமானின் பார்வையினையும், வாள் போல் (ஒளியை யுடைத்தாகிய) நுதலினையு முடைய ஆடு மகள்,

(மெல் இயல்—ஐம்பொறிகளுக்கும் இன்பம் விளைவிக்கும் தோற்றம்,)

32-33. நடை மெலிந்து, அசைஇய, மெல் சிறு அடி கல்லா இளையர் மெல்ல தைவர = நடந்த (களைப்பால்)

இளைத்து, ஓய்ந்த, மெல்லிய சிறிய அடிகளை களங்கமற்ற இளையோர் மெத்தென்று வருட,

(ஆற்றுப் படுத்தல்—பரிசில் பெறக் கருதிய பாணனைப் பரிசில் பெற்றான் ஆற்றுப் படுத்துகிறான்; ஆறு—வழி; படுத்தல்—காட்டல்)

இரவலனை விளித்துக் கூறுகிறான்:—

**34-35.** பொன் வார்ந்து அன்ன புரி அடங்கு நரம்பின், இன் குரல் சிறுயாழ், இடம்வயின் தழீஇ=உருக்கிய பொன் ஒழுகினால் போன்று முறுக்கடங்கின நரம்பினை யுடைய சிறிய யாழை, இடப்பக்கத்தே அணைத்து,

**35-37.** நைவளம் பழுநிய, நயம் தெரி பாலை, கைவல் பாண் மகன், கடன் அறிந்து இயக்க=இனிமையாய் வாசித்துப் பழகிய, இனிமையைத் தெரிக்கும் பாலைப் (பண்ணை), வாசிக்குந் திறன் பெறற பாணன், (வாசிக்கும்) முறையை அறிந்து வாசிக்க,

**38-39.** இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇ=(சகடம் போல்) சுற்றும் உலகத்தின் வரையாது கொடுப்போரை விரும்பி; துனி கூர், எவ்வமொடு, துயர் ஆற்றுப் படுப்ப=(வறுமையால் தன்னையே தான் வெறுக்கும்) வெறுப்பு மிகுந்த, வருத்தத்தோடு கூடின, (உன்னுடைய துன்பமே (உனக்கு வள்ளலை அடையும்) வழியைக் காட்ட,

**40.** முனிவு இகந்து இருந்த, முதுவாய் இரவல=(நடந்து வந்த) வருத்தம் தீர்ந்த, (யாழை வாசிக்கும்)பேரறிவு பெற்ற இரவலனே,

(நீ விரும்பிச் செல்லும் சிறந்த வள்ளலாகிய நல்லியக் கோடன் பின்வரும் மூன்று தமிழ் மன்னர்களினும் ஏழு வள்ளல்களினும் நாட்டிலும் கொடையிலும் சிறந்தவன்.)

குட்ட நாட்டிற்குரிய சேரன் சேங்குட்டுவனின் சிறப்பும், அவன் ஊராகிய வஞ்சியின் சிறப்பும்:—

(சேரன், நெடுஞ் செழியன், செம்பியன் இம் மூவேந்தரின் நாட்டுச் சிறப்பைக் கூறி, பிறகு எழு வள்ளல்கள் நன்கொடைச்சிறப்புக் கூறுகிறார்.)

சேரன் : வஞ்சி

41-46 : கொழுமீன் குறைய ஒதுங்கி, வள் இதழ் கழுநீர் மேய்ந்த கய வாய் எருமை=கொழுத்த மீன் துண்டுபட (பெரிய காலால் மிதித்து) நடந்து, வளைந்த இதழ்களை யுடைய செங்கழு நீர்ப் பூவைத் தின்ற பெரிய வாயை யுடைய எருமை; பைகறி நிவந்த, பலவின் நீழல், மஞ்சள் மெல் இலை மயிர் புறம் தைவர=பசிய மிளகுக் கொடி படர்ந்த, பலா மரத்தின் நிழலின் கண் (வளரும்), மஞ்சள் செடியினது மென்மையான இலைகள் (அவ்வெருமையின்) மயிரையுடைய முதுகைத் தடவ (நடந்து சென்று), விளையா இள கள் நாற, மெல்குபு பெயரா=(அப்பூவின்) முற்று பெறாத தேன் சொட்ட, (மெல்ல மெல்ல) மென்று அசையிட்டு; குளவி பள்ளி பாயல் கொள்ளும்=காட்டு மல்லிகை படர்ந்த படுக்கையில் துயில் கொள்ளும்,

47-50 : குட புலம் காவலர் மருமான்=(அத்தகைய வளப்பம் மிகுந்த) மேற்றிசைக் கண்ணுள்ள நிலத்தைக்

காக்கும் குடியில் தோன்றிய (சேர மன்னன்); ஒன்னார் வட புலம் இமயத்து, வாங்குவில் பொறித்த=தன்னுடன் ஒன்று படாத பகைவரின் வடக்கின் கண் உள்ள நிலத்திடத்தே (நிற்கும்) பனி மலையின்கண், வளைந்த (வெற்றி) வில்லை நாட்டிய; எழூ உறழ், திணி தோள் இயல் தேர் குட்டுவன்= (அவ்வில்லின் இருப்பு அம்பினும்) பலம் கொண்ட, வலிமை பெற்ற தோளினையும் விரைந்து செல்லும் தேரினையுமுடைய (குட்டுவ நாட்டின்) செங்குட்டுவனுடைய; வரு புனல் வாயில் வஞ்சியும் வறிது=விரைந்து ஓடும் (நீரையுடைய பரந்த) ஆறு போன்ற கோபுர வாயிலினையுடைய வஞ்சி யென்னும் ஊரும் (பரப்பில் நல்லியக் கோடனின் நாட்டினும்) சிறிதே; அதா அன்று=(நீ பரிசில் பெறக்கருதி செல்லும் நாடு அவ்வஞ்சியும் அல்ல,)

பாண்டியன் நெடுஞ் செழியனின் நாட்டிலுள்ள கோற்கை, மதுரையின் சிறப்பு.

**51-52.** நெடுஞ் செழியன் (பாண்டிய மன்னன்), **கோற்கை:**—நறவு வாய் உரைக்கும், நாகு முதிர் நுணவத்து, அறை வாய் குறு துணி=(பூக்கள்) தேனை துளித் துளியாய்ச் சொட்டும், இளமை முற்றின நுணா மரத்தினது, வாளால் அறுத்த குறுகிய துண்டை.

**52–53.** அறை வாய் குறு துணிஅயில் உளி பொருத கைபுனை செப்பம் கடைந்த மார்பின்மந்தி=கூர்மை யான உளியால் குத்திக் கையால் (அதன் சாதிலிங்க வண்ணம் தோன்ற) அழகாகக் கடைந்தாற் போன்ற மார்பினையுடைய பெண் குரங்கு,

(முற்றிய நுணா மரத்தின் உள் அகம் சாதிலிங்க நிற முடையது, மந்தியின் முலையும் அந்நிறங் கொண்டதே.)

54. செய்பூ கண்ணி செவி முதல் திருத்தி=கெட்டியால்) செய்த பூ மாலையைச் செவிகளில் அமர (நெற்றியில்) கட்டி, (செய்பூ=கையால் கெட்டி கொண்டு செய்த பூ, இயற்கையில் வளரும் பூ அல்ல).

55-56. நோன் பகடு, உமணர் ஒழுகையொடு வந்த=வலிமை பொருந்தி (திரண்டு பருத்த) கழுத்தையுடைய, உப்பு வாணிகருடைய (வண்டி) வரிசையுடன் வந்த; மகாஅர் அன்னமந்தி=(உப்பு வாணிகர்) தங்கள் பிள்ளைபோல் வளர்த்த மந்தி,

57-61. மடவோர், நகாஅர் அன்ன, நளிநீர் முத்தம்=மடப்பத்தையுடைய மகளிருடையை, பற்களை யொத்த, மிக்க அழகு பெற்ற முத்தை; வாள் வாய் எருத்தின் வயிற்று அகத்து அடக்கி=வாள் போன்ற வாயை யுடைய (இரண்டு) கிளிஞ்சல்களின் உள்ளே வைத்து; தோள் புறம் மறைக்கும்=தோளை மறைத்து; நல் கூர் நுசுப்பின்=அழகிய இடையின்கண்; உளர் இயல், ஐம்பால் உமட்டியர் ஈன்ற=அசைகின்ற இயல்பினையும்; ஐந்து வகையாக முடிக்கும் (தன்மையையுமுடைய மயிரினையுடைய) உப்பு வாணிகப் பெண்டிர் ஈன்ற; கிளர் பூண் புதல்வரொடு கிலு கிலி ஆடும்=ஒளி பொருந்திய ஆபரணங்கள் (அணிந்த) பிள்ளைகளுடனே கிலு கிலுப்பை ஆடும்;

62-65. தத்து நீர் வரைப்பின் கொற்கை கோமான்=பாய்ந்து செல்லும் கடலைத் தனக் கெல்லையாக வுடைய கொற்கை நாட்டரசனும்; தென்புலம் காவலர் மருமான்=தென்னாட்டைக் காக்கும் குடியிலுள்ளோனும்; ஒன்னார் மண் மாறு கொண்ட, மாலை வெண் குடை, கண் ஆர் கண்ணி கடு தேர் செழியன்=தன்னுடன் மாறு பட்ட பகைவரின்

நிலத்தைக் கொண்டவனும், முத்துக் குச்சத்தால் அழகு பெற்ற (வெற்றி) வெண்குடையை யுடையவனும், கண்ணிற்கு அழகான கண்ணியினையும் கடிய தேரினையுமுடைய வனுமான செழியனது,

66-67. மதுரை: தமிழ் நிலை பெற்ற, தாங்கு அரு மரபின், மகிழ் நனைமறுகின் மதுரையும் வறிதே = தமிழ் மொழி நிலை பெற்றதும், ஒப்பில்லாத பழைமையும, மகிழ்ச்சி மிகுந்த தெருக்களையுமுடைய மதுரையும் சிறிதே; அதா அன்று = (நல்லியக் கோடனின் நாடு) அம்மதுரையுமல்ல.

சோழ மன்னனாகிய செம்பியனது ஊராகிய உறந்தையின் சிறப்பு :—

68-71. செம்பியன் (சோழ மன்னன்): நறு நீர் பொய்கை, அடை கரை நிவந்த = தெளிந்த நீர் கொண்ட குளத்தின், சுற்றி வளைந்த கரையின்கண் வளர்ந்த; துறு நீர் கடம்பின், துணை ஆர் கோதை = நெருங்கி வளரும் கடம்ப மரத்தின், பூக்களால் தொடுத்த மாலை, ஓவத்து அன்ன = சித்திர கோலம்போல; உண் துறை மருங்கின் = நீருண்ணும் துறையிடத்தே, கோவத்து அன்ன கொங்கு சேர்பு உரைத் தலின் = இந்திர கோபத்தை யொத்த (தங்கள்) செறிந்த தாதை யுதிர்த்து (அழகு படுத்திய இடத்தையும்), (இந்திர கோபம் = சிவந்த வெல்வட் வண்டு).

72-78. வரு முலை அன்ன, வள் முகை உடைந்து = எழுகின்ற முலையை யொத்த, யெரிய முகை உடைந்து; திரு முகம் அவிழ்ந்த தெய்வம் தாமறை = அழகிய முகம் போன்ற (பூ) மலர்ந்த தெய்வத்திற்குப் பிரியமான தாமரை மலரின்; ஆசு இல் அகம் கை அரக்கு தோய்ந் தன்ன = குற்ற

யில்லாத உள்ளங்கை சாதிலிங்கம் வண்ணம் தோய்ந்தாலொத்த ; செ இதழ் பொதிந்த செம் பொன் கொட்டை= சிவந்த இதழ்கள் சூழ்ந்த செம் பொன்னால் செய்தால் போன்ற பீடத்தில்; ஏமம் இன் துணை தழீஇ=தன்னுயிர்க் காவலாகிய இனிய பெடையைத்தழுவித் (துயில் கொண்டு); இறகு உளர்ந்து=(அத்துயிலெழுந்து தன்) இறகுகளை அசைத்து; காமர் தும்பி காமரம் செப்பும்=காதலுற்ற தும்பி காதல் கொண்டு ரீங்காரம் செய்யும்; தண் பணை தழீஇய தளரா இருக்கை=மருத நிலஞ் சூழ்ந்த பெருக்கம் பெற்ற குடியிருப்பினையுமுடைய்,

(வண்டினங்களுக்கு இருப்பதுபோல தும்பிக்கும் கூர்மையான செவி யுணர்ச்சியுண்டு; துன்புற்ற காலத்திலும் இன்புற்ற காலத்திலும் பலவாக ரீங்காரம் செய்யும், இதை நோக்கியுள்ளார்கள் அக்காலத்து கவிகள், கு-பா. 146-48 அடிகளைப்பார்க்க),

79-81. குணபுலம் காவலர் மருமான்=கிழக்கின் கண்ணுள்ள நிலத்தைக் காத்தற் றொழிலையுடைய குடியிலுள்ளோன்; ஒன்னார் ஓங்கு எயில் கதவம்=தன் பகைவரின் (முன்னிருந்த) உயர்ந்த மதிலையும் கதவத்தையும்; உருமுசுவல் சொறியும் தூங்கு எயில் எறிந்த=(இப்போது) உரு மேறு தன் கழுத்தைத் (தினவு நீங்க) சொறியும் தாழ்ந்த மதிலாக அழித்த; தொடி விளங்கு தடக்கை=தொடி விளங்கும் சிறந்த கையினையும்,

81-83. நாடா, நல் இசை, நல் தேர் செம்பியன்= (ஐய முற்று) ஆராய வேண்டாத, புகழ பெற்றவனும் நல்ல தேரினையுடைய வனுமான செம்பியனது; ஓடா பூட்கை உறந்தையும் வறிதே=(பகைவரைக் கண்டு) ஓடாத வீரக்

கொள்கையையுடைய (அவனது) உறந்தை (யென்னும் ஊர்) சிறிதாயிருக்கும்; அதா அன்று = அவ்வூரன்று, (நீ செல்லும் ஊர்).

(1) பேகன், வள்ளல்கள் எழுவர் = பேகன், பாரி, காரி, ஆய், அதிகன், நள்ளி, ஓரி.)

84-86. வானம் வாய்த்த, வளம் மலை கவாஅன் = காலமழை பெய்தலினால், வளப்ப முற்ற மலைப் பக்கத்தி லுள்ள; கானம் மஞ்ஞைக்கு கலிங்கம் நல்கிய = காட்டில் வாழும் மயிலுக்கு (அது இனிமையாகக் கூவியதற்கு மனம் மகிழ்ந்து) போர்வை கொடுத்த; அடு திறல் அணங்கின், ஆவியர் பெருமகன் = பெறுதற்கரிய வலிமையழகு பெற்ற, ஆவியர் (குடியில் தோன்றிய) சிறந்தவனாகிய; பெரு கல் நாடன் பேகனும் = பெரிய மலை நாட்டு மன்னனாகிய பேக னென்னும் வள்ளலும், (மயில் கூவுதல் மழை பெய்வதற்குக் குறி, மக்கள் மழையைக் கண்டு இன்புறுவர் அது பற்றி மயிலின் இசை இன்பந்தரும்).

(2) பாரி.

87–89. சுரும்பு உண, நறுவீ, உறைக்கும், நாகம் நெடு வழி = வண்டு உண்ணும்படி, நறிய பூ, (தேனைச்) சொட்டும், சுரபுன்னை மரச் (சாலை கொண்ட) தொலையாத வழியில் நின்ற; சிறு வீ முல்லைக்கு பெரு தேர் நல்கிய = சிறிய பூக்களையுடைய முல்லைக் கொடி (காற்றில் ஊசலாடி வருந்தாதபடி) பெரிய தேரைக் கொடுத்த,

90-91. பிறங்குமலை நாடு: பிறங்கு வெள் அருவி வீழும் சாரல் = மிக்க வெள்ளப் பெருக் குற்ற அருவி பாயும் பக்கத்தினையுடைய; பறம்பின் கோமான் பாரியும் = பறம் பென்னும் மலை நாட்டரசனாகிய பாரியென்னும் வள்ளலும்,

(3) காரி.

91-95. கறங்கும் மணி வால் உளை புரவியொடு= ஒலிக்கும் மணியையும் வெண்மையான பிடர் மயிரினையுமுடைய குதிரையுடன்; வையகம் மருள=தனது பரந்த நாட்டையும், (பிறர் வியந்து) மருளும்படி; ஈர நன்மொழி இரவலர்க்கு ஈந்த=அருளினையுடைய நல்ல சொல் சொல்லி இரவலர்க்குக் கொடுத்த; அழல்திகழ்ந்து இமைக்கும், அஞ்சுவரு நெடு வேல்=தணியாத கோபம் மிகுந்து விளங்கும், அச்சந் தோன்றும் நெடிய வேலினையும்; கழல் தொடி தடக்கை காரியும்=உழலும் தொடியினை யணிந்த பெருமையுடைய கையினையுமுடைய காரியென்னும் வள்ளலும்,

(4) ஆய்.

95-99. நிழல் திகழ், நீல நாகம், நல்கிய கலிங்கம்= ஒளி விளங்கும், கரு நாகம், (உரித்துக்) கொடுத்த (தோல்) போர்வையை; ஆல் அமர் செல்வற்கு, அமர்ந்தனன் கொடுத்த ஆய்=ஆலின் கீழிருந்த இறைவனுக்கு, விருப்பத்துடன் கொடுத்தவனும்; சாவம் தாங்கிய, சாந்து புலர் திணி தோள்=வில்லை எடுத்த, சந்தனம் பூசி விளங்கும் திண்ணிய தோளினையும்; ஆர்வ நன்மொழி ஆயும்=கேட்டோர் உவக்க அன்புச் சொல்லினையு முடைய ஆயென்னும் வள்ளலும், (நீலம் என்ற சொல் பத்துப் பாட்டினுள் கருமை, நீலம், பச்சையைக் குறிக்கிறது; நீல நாகம் பன்னிரண்டு நீளம் உடையது, அதன் போர்வை மிகவும் அழகுடையது).

(5) அதிகன்.

99-103. மால் வரை கமழ் பூ சாரல் கவினிய நெல்லி= பெரிய மலையின் நறும் பூக்களையுடைய பக்கத்தில் வளர்ந்த

(கரு) நெல்லி மரத்தின்; அமிழ்து விளை, தீ கனி ஔவைக்கு ஈந்த = அமிழ்து (போன்ற சாறு) கொண்ட, இனிய பழத்தைத் (தான் தின்று அதன் பயனைப் பெறாது) ஔவைக்குக் கொடுத்தவனும்; உரவு சினம் கனலும் ஒளி திகழ் = மிகுந்த சினம் (நெருப்புப் போல்) உமிழும் ஒளி விளங்கும்; நெடு வேல் அரவம் கடல் தானை அதிகனும் = நெடிய வேலினையும் ஆரவாரத்தை யுடைய கடல் போன்ற படையினையுமுடைய வனுமான அதிகனென்னும் வள்ளலும்,

(6) நள்ளி.

103-7. காவாது நட்டோர் உவப்ப = (தன் மனத்தி லுள்ளதை) மறையாது (கூறித்) தன்னுடன் நட்பு செய்தோர் மனம் மகிழ; நடை பரிகாரம் முட்டாது கொடுத்த = (அவர்கள் இல்லறம் இனிது) நடத்தற்குரிய பொருளைக்குறையாது கொடுத்தவனும்; முனை விளங்கு தடக்கை = பகைப் புலத்தே (தன் வெற்றி) விளங்கும் பெருமையை யுடைய கையினையும்; துளி மழை பெய்யும், வளி துஞ்சும் நெடு கோடு, நளி மலை நாடன் நள்ளியும் = தூறல் மழை (பொய்யாது) பெய்யப் பெற்றதும், காற்று உலாவும் நெடிய சிகரங்களை யுடையது மான, செறிந்த மலை நாட்டிற்குரிய நள்ளி யென்னும் வள்ளலும்,

(7) ஓரி.

10/-11. நளி சினை நறு போது கனலிய = செறிந்த கிளைகளினிடத்தே நறிய பூக்கள (நெருப்பு நிறங் கொண்டு) நிறைந்த; நாகு முதிர் நாகத்து குறு பொறை நல் நாடு = இளமை முற்றின சுர புன்னை (வளரும்) குறுகிய மலைகளை யுடைய நல்ல நாடுகளை; கோடியர்க்கு ஈந்த = கூத்தர்களுக்குக் கொடுத்த; காரி குதிரை காரியொடு மலைந்த = கருமை நிறங்

கொண்ட குதிரையை (சிறப்பாகப் பெற்ற) காரி யென்னும் பெயரை யுடையவனுடனே போர் செய்த; ஓரி குதிரை ஓரியும் = செறிந்த பிடரி மயிரினை யுடைய குதிரையைச் (சிறப்பாக யுடைய) ஓரி என்னும் வள்ளலும், (கருமையும், செறிந்த பிடரியும் அவ்வவ்வரசர்களின் குதிரையின் சிறப்பைக் கூறுகின்றன; அது பற்றி காரி ஓரி என்ற பெயர்கள் அவ்வரசர்களுக்கு வழங்கலாயின.)

நல்லியக் கோடனின் குடிச் சிறப்பு:

111-113. என ஆங்கு எழு சமம் கடந்த = என்று அக்காலத்து பகைத்து எழுந்த போர்களைக் கடந்த; எழு உறழ் திணி தோள் எழுவர் = இருப்பு அம்பினும் வலிமை பொருந்திய தோளினையுடைய எழு வள்ளல்கள்; பூண்ட ஈகை செறுகம் = மேற்கொண்ட கொடையாகிய செவ்விய பாரத்தை;

114-116. விரி கடல் வேலி வியலகம் விளங்க = பரந்த கடலை எல்லையாக யுடைய அகன்ற உலகமெல்லாம் புகழ் விளங்க; ஒரு தான் தாங்கிய, உரன் உடை நோன் தாள் = ஒப்பற்றமையைத் தான் ஒருவனே பெற்றவனும், வெற்றி வலிமையை யுடைய வலிமை பெற்ற தாள்களையுமுடையவனும்,

116-21. நறு வீ நாகமும் அகிலும் ஆரமும் = மணம் பொருந்திய பூக்கள் செறிந்த சுரபுன்னையையும் அகிலையும் சந்தனத்தையும்; துறை ஆடு மகளிர்க்கு = நீர்த் துறையின் கண் திளைத்தாடும் மகளிரின்; தோள் புணை ஆகிய = தோள்களுக்குத் தெப்பமாக உதவி; பெரு புனல் தரூஉம், போக்கு அருமரபின் தொல் மா இலங்கை = கரையைக் குத்

தும் நீர்ப் பெருக்கை யுடையதும், அழித்தற்கரிய முறைமை யினையும் பழைய பெருமையையு முடைய இலங்கை; கருவொடு பெயரிய, நல் மா இலங்கை=தோன்றிய காலத்திலேயே பெயர்ச் சிறந்த, நல்ல பெருமையையு முடைய இலங்கையின்; மன்னருள்ளும் மறு இன்றி விளங்கிய=பல அரசர்களினும் குற்றமின்றி விளங்கிய,

121-23. வடு இல் வாய் வாள்=குற்றமில்லாத வெற்றியையுடைய வாளினையுடையவனும்; உறுபுலி துப்பின்=மிக்க வலி பொருந்திய புலிபோன்ற வலியினை யுடைய; ஓவியர் பெருமகன்=ஓவியர் குடியில் தோன்றியவனும்; களிறு தழும்பு இருந்த=யானையைச் (செலுத்துதலால்) தழும்பு பட்டு; கழல் தயங்கும், திருந்து அடி=வீரக்கழல் கிடந்தசைந்து, (பகைவர்க்குப்) பிறக்கிடாத அடியினை யுடையவனும்;

124. பிடிகணம் சிதறும் பெயல் மழை தடக்கை=பிடித்திரளைப் (பலர்க்குக்) கொடுத்தலால் (கொடையில்) பெய்யும் மழையை யொத்த சிறந்த கையினை யுடையவனும்,

125-26. பல இயம் கோடியர் புரவலன்=பல வாச்சியங்களை யுடைய கூத்தர்க்குப் பரிசு கொடுத்துக் காப்பவனுமாகி; பெரு இசை நல்லியக்கோடனை=பெரிய புகழையுடைய நல்லியக் கோடனை; நயந்த கொள்கையொடு= (காண்டற்கு) விரும்பிய கொள்கை யுடனே ;

127-29. தாங்கரு மரபின் தன்னும்=பிறரால் பொறுத்தற்கரிய குடியில் பிறந்த தன்னையும் (அந்நல்லியக் கோடனையும்); தந்தை வான் பொரு, நெடு வரை வளனும் பாடி=அவன் தந்தையின் வானத்தைத் தீண்டும் நெடு மலையின்

செல்வத்தையும் பாடி; முன்னாள் சென்றனம் ஆக = முன்னே நாங்கள் போனேமாக;

வறுமையால் வருந்தினவர்களின் நிலை :—

**129-31.** இந்நாள் = (நாங்கள் சென்ற) இற்றை நாளில்; திறவா கண்ண சாய் செவி குருளை = திறவாத கண்ணையும் (வளைந்து) தொங்கும் செவியினையு முடைய நாய்க் குட்டி; கறவா, பால் முலை கவர்தல் நோனாது = (பால் சுரக்காததினால்) கறவாத, பால் முலை உண்ணுதலால் உண்டாகிய வலியைப் பொறாது; (பசியால் பால் வற்றின முலை)

**123-33.** புனிறு நாய் குரைக்கும் புல் என் அட்டில் = குட்டி ஈன்ற நாய் குரைக்கும் பொலிவழிந்த அடுக்களையில்; காழ் சோர் முது சுவர் கணம் சிதல் அரித்த = (கயிறற்றதனால் கூரையின்) மூங்கில் கொம்புகள் சரிந்து விழுந்தும், பழைய சுவற்றின் கண் கூட்டம் கூட்டமாய் கறையானால் அரிக்கப் பட்டதுமான (அட்டிலில்);

**134.** பூழி பூத்த புழல் காளாம்பி = நனைந்த புழுதியில் பூத்த உள் பொய்யான காளான் வளர்ந்ததுமான (அட்டிலில்) (புழல் = (hollow)

**135-37.** ஒல்கு பசி உழந்த ஒடுங்கு நுண் மருங்குல், வளை கை கிணைமகள் வள் உகிர் குறைத்த = வருத்தும் பசியால் வருந்தி ஒடுங்கிய நுண்ணிய இடையையும், வளை அணிந்த கையினையுமுடைய பறை கொட்டும் மகள் தன் பெரிய உகிர்களால் கிள்ளின; குப்பை வேளை உப்பு இலி வெந்ததை = குப்பை மேட்டில் விளைந்த வேளைக் கீரையை உப்புமில்லாமல் சமைத்து,

138–40. மடவோர் காட்சி நாணி கடை அடைத்து = (பிறர் வறுமையைப் பறை யடித்துக் கூறும்) புறங் கூறுவோர் காண்டற்கு நாணி வாயில் கதவை அடைத்து ; இரு பெரு ஒக்கலொடு ஒருங்கு உடன் மிசையும் = கரிய பெரிய சுற்றத் தினரோடு ஒன்று கூடித் தின்னும் ; அழி பசி வருத்தம் வீட = (எல்லா அறிவையும்) அழித்தற்குக் காரணமான பசிப்பிணி நீங்கும்படி,

140-43. பொழி கவுள், தறுகண் பூட்கை, மணி தயங் கும் மணி மருங்கின், சிறு கண் யானையொடு = மதம் வீழ் கின்ற கன்னத்தையும், பகைவர்க்கு அஞ்சாத வலிமையினை யும், மணி யசைந்து தொங்கும் பக்கத்தினையும், சிறிய கண்ணையுமுடைய யானையுடன் ; பெரு தேர் எய்தி யாம் அவண் நின்றும் வருதும் = பெரிய் தேரையும் பெற்று யாம் அவ்விடத்தினின்று (அந்நல்லியக் கோடனிடமிருந்து) வாரா நின்றோம்.

143-45. நீயிரும், இவண் நயந்து இருந்த, இரு பேர் ஒக்கல் செம்மல் உள்ளமொடு செல்குவிர் ஆயின் = (அவ் வாறே) நீங்களும், இவ்விடத்தில் வறுமையுற்றிருந்த, கரிய பெரிய சுற்றத்தினர் வறுமையும் கருதி செவ்விய உள்ளத் துடன் (அவனிடத்தே) செல்வீரானால்,

நல்லியக் கோடனின் நாட்டின் சிறப்பு,

எயிற்பட்டினம் 146–50. அலை நீர் தாழை அன்னம் பூப்பவும் = அலையும் நீரை யுடைய கடல் கரையிலுள்ள தாழை அன்னம் போல் பூக்கையினுலும்; தலை நாள் செருந்தி தமனியம் மருட்டவும் = மலரத் தொடங்கும் காலத்தில்

2

(இளவேனில் காலம்), செருந்தி (கொன்றை) பொன்னென்று கருதி பிறர் மருளப் பூக்கவும ; கடு சூல் முண்டகம் கதிர் மணி கழா அலவும் = மொட்டு முற்றுப் பெற்ற கழிமுள்ளி ஒள்ளிய நீலமணி போல பூர்க்கையினுலும்; நெடு கால் புன்னை நித்திலம் வைப்பவும் = நெடிய தாளினையுடைய புன்னை முத்துப் போல் அரும்பு விடவும் ; கானல் வெண் மணல் கடல் உலாய் நிமிர்தர = கடற்கரையின் வெள்ளிய மணல் கடலின் அலை நீரால் மேடிட்டு நிற்கவும்,

(அழகுற்ற அத்தகைய வழியை யுடைய), **151–53.** பாடல் சான்ற நெய்தல் நெடு வழி = புகழ் பெற்ற நெய்தல் நிலத்து தொலையாத வழியினையும் ; மணி நீர் வைப்பு, மதிலொடு பெயரிய = நீல மணி போல் கழி (சூழ்ந்த) ஊர் (உயர்ந்த மதில்களுடையதினுல்) மதில் சூழ் நாடென்று (சிறப்புப்) பெயர் பெற்றதுமான; பனி நீர் படுவில், பட்டினம் படரின் = குளிர்ந்த நீரையுடைய குளங்களை யுடைய, எயிற் பட்டினத்தே செல்வீராயின்,

கிடங்கில் **154-56.** ஓங்கு நிலை ஒட்டகம் துயில் மடிந்தன்ன = உயர்ந்த தன்மையை யுடைய ஒட்டகம் தூங்கி கிடந்தால் போலக் (குவிந்திருக்கும்) ; வீங்கு திரை கொணர்ந்த விரை மரம் விறகில் = கடலின் உயர்ந்த அலைகள் கொண்டு வந்த மணமுடைய அகில் மரத்தின் விறகின் கண் ; கரு புகை செ தீ மாட்டி = கரிய புகையை யுடைய சிவந்த நெருப்பை எரித்து,

**156-58.** பெரு தோள், மதி ஏக்குறூஉம் மாசு அறு திருமுகத்து, நுதி வேல் நோக்கின் நுளைமகள் அரித்த = திரண்ட தோளினையும், சந்திரனும் (தான் பெற்றிலே மென்று

வருந்தும் (அத்தகைய) குற்றமற்ற அழகிய முகத்தினையும், கூர்மையான வேல் போன்ற கண்களையு முடைய நுளைச்சாதி மகளால் அரிக்கப் பட்ட,

159. பழ படு தேறல் பரதவர் மடுப்ப=பழைதாகி (மயக்கத்தை யுண்டாக்கும்) கள் தெளிவைப் பரதவர் குடிக்க,

160-63. கிளைமலர் படப்பை கிடங்கின் கோமான்= கிளைகளில் மலர் செறிந்த தோட்டங்களை யுடைய கிடங்கி லென்னும் ஊர்க் காசனும்; தளை அவிழ் தெரியல் தகை யோன் பாடி = மலர்ந்த பூக்கள் பெற்ற மாலையைப் பூண்டு அதை யொத்த (அழகு பெற்று விளங்கும்) அவ்வரசனைப் பாடி; அறல் குழல், பாணி தூங்கி அவரொடு = இனி மையா யிசைக்கும், குழலோசையுடன் ஒன்று பட்டு ஆடின மகளிரோடு; வறல் குழல் சூட்டின்=உலர்ந்த குழல் மீனின் சுட்ட கருவாட்டை; வயின் வயின் பெறுகுவிர்=ஒவ்வொரு மனைதோறும் பெறுகுவிர்;

வேலூர்: 164-68. பை நனை அவரை பவழம் கோப்ப வும் = பசிய மொட்டுள்ள (அவரைச் செடியின்) அவரைக் கொட்டைகள் பவழம்போல் கோத்துத் தொங்கவும்; கரு நனை காயா கணம் மயில் அவிழவும் = நீல மொட்டுகளை யுடைய காயாஞ் செடியின் (பூக்கள்) நீல மயில் கூட்டம் போல் பூத்து நிற்கவும்; கொழு கொடி முசுண்டை கொட் டம் கொள்ளவும் = கொழுவிய கொடியை யுடைய முசுண் டையின் பூக்கள் நூல் நூற்கும் கொட்டைபோல் அச்செடி யின் கண் தொங்கவும்; செழு குலை காந்தள் கைவிரல் பூப் புவும் = வளம் மிக்க குலைகளை யுடைய (செந்நிறக்) காந்தள்

பூக்கள் கைவிரல் போல் பூப்பவும்; கொல்லை நெடுவழி கோபம் ஊரவும் = கொல்லையின் நெடிய வழியிலே (சாதி லிங்க செந்நிறம் கொண்ட) இந்திர கோப வண்டுகள் ஊர்ந்து செல்லவும்,

169. முல்லை சான்ற முல்லை அம் புறவின் = கற்புடைய மகள் இல்லிருந்து நல்லறம் நடத்துவதை யொத்த முல்லைக் கொடி படர்ந்த அழகிய காட்டிடத்து,

170-71. விடல் கால் அருவி, வியல் மலை சுடர் மூழ்கி கான் மாறிய செவ்வி நோக்கி = முழைஞ்சுளிலே குதிக்கும் அருவி (பாயும்), பெரிய மலையின் பின் ஞாயிறு சாய்ந்து செறிந்த கிரணங்கள் மறைந்த செம்மானத்தை நோக்கி,

(இற்றைக்கும் இவ்வழகிய காட்சியை வேலூர் மலையின் கண் ஞாயிறு மறையும் போது காணலாம்)

172-73. திறல் வேல் நுதியின் பூத்த கேணி = வலிமை பெற்ற வேலின் முனைபோல் பூக்கள் பூத்து நிற்கும் குளங்களை யுடைய, விறல் வேல் வென்றி வேலூர் எய்தின் = வெற்றி வேலால் வெற்றி யடைந்த வேலூரைச் சேரின்,

(வேலூர்: நல்லியக் கோடனின் கனவில் முருகன் தோன்றி, "இக் கேணியில் பூக்கும் பூவை அம்பாகத் தொடுத்து எய்தால் நீ வெற்றி யடைவாய்", என்று சொல்லியதால் இவ்வூருக்கு இப்பெயர் வழங்கலாயிற்று என்னும் கதை ஒன்றுண்டு.)

174-77. உறு வெயிற்கு உலைஇய, உருப்பு அவிர் குரம்பை = மிகுகின்ற வெயிலால் வருந்தி, வெப்பம் மிகுந்த

குடியில் வாழும்; எயிற்றியர் அட்ட இன் புளி வெ சோறு = எயின குலத்து பெண்டிரால் சமைத்த இனிய புளியஞ்சாறு பெய்த வெவ்விய (புளிச்) சோற்றை; மேனி தேமா சில்வளை ஆயமொடு = தேமாவின் (இளந் தளிர் போன்ற) மேனியையும் சில வளையினையு முடைய (நும்மகளிரின்) கூட்டத்துடனே; ஆமான் சூட்டின் அமைவர பெறுகுவிர் = ஆமானினது சுட்ட இறைச்சியையுடன் உங்கள் பசி நீங்க பெறுகுவீர்,

(சில்வளை : மூத்த பெண்டிர்கள் சில வளை அணிவர், டல்வளை : பதினொரு வயதுக்குட்பட்ட பெதும்பை பெண்கள் பல வளை அணிவர்; இவ் வழக்கத்தை இக்காலத்தும் சில மக்களிடையே காணலாம்; ஆமானின் இறைச்சி நெய் யொழுகும் இறைச்சி, ஆமான் = Sambur.)

ஆமூர் :

178-82. நறு பூ கோதை தொடுத்த நாள் சினை = நறிய பூங்கோதை தொடுத்தாற் போன்ற காலை பூக்கள் செறிந்த கிளைகளுள்ள, குறு கால் காஞ்சி கொம்பர் ஏறி = குறிய தாளினை யுடைய காஞ்சி மரத்தின் கிளையிலேயேறி, நிலை அரு குட்டம் நோக்கி நெடிது இருந்து = ஆழங் காணுதற்கு அரிதாகிய குளத்தை நோக்கி நெடும் பொழுதிருந்து, புலவு கயல் எடுத்த பொன்வாய் மணிச்சிரல் = புலால் நாற்றங் கொண்ட கயல் கெண்டையை யெடுத்த பொன்னிறங் கொண்ட அலகை யுடைய நீலமணி நிறங் கொண்ட மீன் கொத்திப் பறவையின், வள் உகிர் கிழித்த வடு ஆழ் பசு அடை = பெரிய அலகால் கிழிக்கப்பட்டு வடு வழுந்தின பசிய இலையினை யுடைய,

183-86. முள் அரை தாமரை முகிழ் விரி நாள் போது = முள்ளையுடைத்தாகிய தண்டினையுடைய தாமரையின் அரும்பு விரிந்த காலைப் பூவின்; கொங்கு கவர் நீலம் செங்கண் சேவல் = தேனை நுகர்கின்ற நீல நிறத்தினையும் சிவந்த கண்ணினையுமுடைய ஆண் வண்டுகளின் (வரிசையானது); மதி சேர் அரவின் மான தோன்றும் = திங்களைச் சேர்கின்ற (கரும்) பாம்பை யொப்பத் தோன்றும்; மருதம் சான்ற மருதம் தண் பணை = (ஊடியும் கூடியும் இன்பம் அடையும் தன்மை யமைந்த) மருத நிலத்தின் குளிர்ந்த வயல்களையுடையது.

187-8. அந்தணர் அருகா அருகடி வியன் நகர், அம் தண் கிடங்கின் அவன் ஆமூர் எய்தின் = அந்தணர் குறைபடாததும் அரிய காவலையுடைய பரந்த நகரங்களையுமுடையதும், அழகும் குளிர்ச்சியும் பெற்ற கிடங்கினையுமுடையதுமான அவன் ஆமூரைச் சேர் வீராயின்;

189-95. வலம்பட நடக்கும், வலிபுணர் எருத்தின் = (கலப்பையை நிலத்தில்) உழுது சுற்றி நடக்கும், வலிபெற்ற கழுத்தினையுடைய; உரன் கெழு நோன் பகடு உழவர் தங்கை = வலிமை நிறைந்த எருதுகளையுடைய உழவருடைய தங்கையாகிய; பிடி கை அன்ன பின்னு வீழ் சிறு புறத்து தொடிக்கை மகடூஉ = பிடியினது துதிக்கை போன்ற பின்னின மயிர் வீழ்ந்து கிடக்கும் சிறிய கழுத்தினையும் தொடி யணிந்த கையினையுமுடைய மகள்; மகமுறை தடுப்ப = (தன்) பிள்ளைகளைக் கொண்டு (நீங்கள் அவள் இல்லம் விட்டு) நீங்காது தடுத்து; இரு காழ் உலக்கை இரும்பு முகம் தேய்த்த = கரிய வயிரத்தையுடைய உலக்கை

யினது இருப்புப்பூண் தேயப் பண்ணின; அவைப்பு மாண் அரிசி, அமலை வெள் சோறு=குற்றுதலால் மாட்சிமைப் பட்ட அரிசியாலாக்கிய, கட்டியாகிய வெள்ளிய சோற்றை; கவை தாள் அலவன் கலவையொடு பெறுகுவிர்=வளைந்த காலினையுடைய ஞெண்டு (இறைச்சியொடு கூடிய) கலப்புடனே பெருகுவிர்; (புலவுச்சோறு என்னும் புலால் சோறுபோலும்).

அவன் பழைய ஊர் அருகில் இருக்கிறது. 196-98. எரி மறிந்தன்ன நாவின்=தீச்சுடர் சாய்ந்தாலொத்த நாவினையும்; இலங்கு எயிறு=விளங்குகின்ற கோரைப் பற்களினையும்; கரு மறி காதின்=கறுப்பு ஆட்டின் காது போன்ற காதினையும்; கவை அடி பேய் மகள்=வளைந்த அடியினையுமுடைய பேய் மகள்; நிணம் உண்டு சிரித்த தோற்றம் போல=பிணத்தைத் தின்று சிரித்த தோற்றம் போல;

199-202. பிணம் உகைத்து சிவந்த பேர் உகிர், பணை தாள்=(போரில் செத்துக்கிடக்கும்) பிணங்களைக் காலாலே தள்ளிச் சிவந்த பெரிய உகிரினையும், முரசு போன்று (தடித்த) கால்களையுமுடைய; அண்ணல் யானை அருவி துகள் அவிப்ப=சிறந்த யானையின் அருவிபோல் ஒழுகும் மதப் பெருக்கு துகளை அடக்கினதுபோல; நீறு அடங்கு தெருவின், அவன் சாறு அயர் மூதூர்=புழுதி அடங்கின தெருக்களையுடையது, அவனுடைய விழாக் கொள்ளும் பழைய ஊர்; சேய்த்தும் அன்று சிறிது நணி அதுவே=(அவ்வூர்) தூரத்தில் இல்லை சிறிது அருகாமையிலேயே இருக்கிறது.

(விழவு ஒலி அமர்ந்த அகன்ற தெருக்களுக்கு, யானையின் மதப்பெருக்கால் புழுதி அடங்கின போர்க் களம் உவமை, அந்த ஆனைக்குப் பேய் மகள் உவமை.)

